1982 மார்ச் 4]

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறிய புனல் மின் திட்டங்களை பல இடங்களில் ஏற்படுத்தப் போவதாக சில விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அணையில் ஒரு சிறிய புனல் மின் . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வட ஆற்காட்டுக்கும் வைகைக்கும் வெகு தூரம்.

மேல்தாம்பிரபரணி நீர்மின் திட்டம்.

*வினா எண் 342—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோடி ரூபாய் செலவில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் ?

(உ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) மத்திய மின் அதிகாரக் குழுவின் அறிவுரையின் பேரில் திருத்திய திட்ட அறிக்கைக்காக மறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) ஆய்வுப்பணிகள் முடிந்தவுடன் இத்திட்டத்தின் மதிப்பீடு தெரிய வரும்.

(ஈ) 120 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

(உ) ஆய்வுப்பணிகள் முடிந்து திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பிறகு வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : இந்த மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே மத்திய அரசு புலி வருகிறது புலி வருகிறது என்று மாநில அரசை மிரட்டிக் கொண்டு அதற்கு வழி இல்லை என்று சொல்லிவந்தது . . .

திரு. என். எஸ். வி. சித்தன்: மத்திய அரசு மிரட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டை அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் பற்றியது. இதில் ஏன் மத்திய அரசைக் கொண்டுவர வேண்டும் ?

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மத்திய அரசிடம் மீண்டும் வற்புறுத்தி சீக்கிரம் இந்த வேலையை ஆரம்பிக்க, சீக்கிரம் ஆய்வு செய்து முடிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டப்பகுதியில் முண்டந் துறையில் யானைகள் மற்றும் புலிகள் சரணாலயம் அமைந்துள்ளதால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் புலி போல் இருப்பது நல்லதுதானே, எலி யாக இல்லாமல். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் நானும் கலந்து பேசி அந்தப் பகுதியில் இத்திட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொள் வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். அந்த ஆய்வுகளை மின்சாரத் துறையினர் இப்போது நடத்தி வருகிறார்கள். அந்த ஆய்வுமுடிவு கிடைத்த பின் மேற்கண்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : நாளுக்கு நாள் விலைவாசிகள் விஷம்போல் ஏறிவருகின்றன. எற்கெனவே இத்திட்டத்திற்காக ஒரு எஸ்டிமேட் தயாரித்திருப்பார்கள். வனத் துறை அமைச்சர் அவர்களும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் பேசி இத்திட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக அத் தொகுதி மக்கள் சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் காலம் கடப்பதால் விலைவாசியேற்றம் அதிகமாகி பணம் விரயமாகும். ஆகவே காலாகாலத்தில் இத்திட்டத்தை அமல்படுத்துவ தற்கான முறையில் ஒரு நாள் குறித்து கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டத்திற்கான எஞ்சிய ஆய்வுப்பணிகளை ஆறு மாதத்தில் முடிக்கவேண்டுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல்: மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டத்தை செயல் படுத்துவது சம்பந்தமான விளக்கங்களை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். இதேபோல் பழனிப் பகுதியில் சண்முகா நதி நீர் மின் திட்டம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர் பில்லை.